TNVR1E0003462025

**<u>சார்பு நீதிமன்றம், சாத்தூர்</u>**

**<u>முன்னிலை –</u>** திரு.S.முத்து மகாராஜன், **M.A.,L.L.M.,**

சார்பு நீதிபதி, சாத்தூர்

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 02 ம் நாள் வியாழக்கிழமை

**<u>O.P. (HMOP) No. 1 / 2026</u>**

C.N.R No. TNVR1E0003462025

-------

xxxxx .. மனுதாரர்

- எதிர் –

xxxxx .. எதிர்மனுதாரர்

இம்மனு என் முன்பாக 22.06.2026 தேதியன்று முடிவான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.மணிவண்ணன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரின்மையால் ஒருதலைப்படுத்தப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதத்தைக் கேட்டும், இம்மனு இதுநாள் வரையில் நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 29.05.2017 ம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தினை ரத்து செய்து மனுதாரருக்கு விவாகரத்து பரிகாரம் வழங்கி உத்தரவிடக் கோரியும், மனுவின் செலவுத்தொகையை எதிர்மனுதாரர், மனுதாரருக்கு வழங்க உத்தரவிடக் கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் மனுதாரரால் இந்து திருமண சட்டம் பிரிவு 13(1)(i–a) (i–b)–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. <u>மனுதாரர் தரப்பு மனுச் சுருக்கம் :–</u>**

2.1. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 29.05.2017 ம் தேதியன்று மேலத்தாயில்பட்டி கலைஞர் காலனியில் உள்ள அருள்மிகு ஸ்ரீமுருகன் திருக்கோவிலில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது மனுதாரருக்கு 9 பவுன் தங்க நகையும், எதிர்மனுதாரருக்கு 1 பவுன் கழுத்து செயின், 1/2 பவுன் மோதிரம் , வாட்ச், ரொக்கம் ரூ.10000/– மற்றும் ரூ.60,000/– மதிப்புள்ள சீர்வரிசைப் பொருட்களும் கொடுக்கப்பட்டது. சீர்வரிசைப் பொருட்கள் அனைத்தும் எதிர்மனுதாரர் வசம் இருந்து வருகிறது. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரது இல்லற வாழ்க்கையின் பயனாக 28.02.2019 தேதியில் ஒரு ஆண்குழந்தையும், 24.04.2021 தேதியில் ஒரு பெண்குழந்தையும் பிறந்துள்ளது. பின்னிட்டு எதிர்மனுதாரர் எவ்வித வேலைக்கும் செல்லாமல் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து சித்ரவதை செய்துள்ளார். பின்னிட்டு எதிர்மனுதாரர் நடவடிக்கையில் பல மாற்றங்கள் ஏற்பட்டு மனுதாரர் எந்தநேரமும் செல்போனில் மணிக்கணக்கில் பேசி வந்ததை மனுதாரர் கண்டித்ததற்கு எதிர்மனுதாரர் மனுதாரரை அடித்து சித்ரவதை செய்துள்ளார்.

2.2. மேலும், கடந்த 26.07.2023 தேதியில் மது குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து இரு குழந்தைகளையும் பிடுங்கி வைத்துக்கொண்டு வீட்டைவிட்டு விரட்டி விட்டுள்ளார். பின்னிட்டு மனுதாரர் தனது குழந்தைகளை பார்க்க சென்றபோது மனுதாரரை வீட்டிற்குள் நுழையவிடாமல் பிரச்சினை செய்து விரட்டிவிட்டுள்ளார். அதனால் மனுதாரர் மனதளவிலும், உடலளவிலும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்.

பின்னிட்டும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ பெரியவர்கள் மூலம் பலமுறை முயற்சி செய்தும் எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழவில்லை. மனுதாரரும், எதிர்மனுதாரரும் சுமார் 2 ஆண்டுகளுக்கும் மேலாக பிரிந்து தனியே வாழ்ந்து வருகிறார்கள். மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் இடையிலான திருமணம் மீண்டும் ஒன்று சேர்க்க முடியாத அளவிற்கு அறுந்துபோய் பெயரளவில் மட்டுமே உள்ளது. எனவே மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 29.05.2017 தேதியில் நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து விவாகரத்து வழங்க கோரி மனுதாரர் இம்மனு தாக்கல் செய்துள்ளார்.

**3.** எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் ஆஜராகியிருந்தும், பின்னிட்டு எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைப்படுத்தப்பட்டு, தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்.

**4.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் மனுதாரரின் விவாகரத்து அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5.** மனுதாரர் தரப்பில் ம.சா.1 சாட்சி விசாரிக்கப்பட்டு ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தோன்றாத்தரப்பினர் ஆகியுள்ளார்.

<u>**பிரச்சினைக்கு தீர்வு :–**</u>

**6.** மனுதாரர் தரப்பு கேட்கப்பட்து. மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த

29.05.2017 ம் தேதியில் திருமணம் நடைபெற்றதாக மனுதாரர் தரப்பில் குறிப்பிடப்பட்டு, மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் நடைபெற்ற திருமண பத்திரிக்கை ம.சா.ஆ.1 ஆகவும், மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரது ஆதார் அடையாள அட்டையின் ஒளிநகல் ம.சா.ஆ.3 ஆகவும், மனுதாரரது இருப்பிடச்சான்றிதழ் ம.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரர் ம.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார்.

**7.** மனுதாரர் தரப்பில், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரது இல்லற வாழ்க்கையின் பயனாக தங்களுக்கு ஒரு ஆண்குழந்தை மற்றும் ஒரு பெண்குழந்தை உள்ளதாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரர் எவ்வித வேலைக்கும் செல்லாமல் தினமும் குடித்துவிட்டு வந்து மனுதாரரை அடித்து சித்ரவதை செய்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் எந்தநேரமும் போனில் மணிக்கணக்கில் பேசி வந்ததை மனுதாரர் கண்டித்ததாகவும், அதனை மனதில் வைத்துக்கொண்டு எதிர்மனுதாரர் கடந்த 26.07.2023 தேதியில் தனது இருகுழந்தைகளையும் பிடுங்கி வைத்துக்கொண்டு மனுதாரரை வீட்டைவிட்டு விரட்டிவிட்டதாகவும், பின்னிட்டு மனுதாரர் குழந்தைகளை பார்க்க சென்றபோதும் எதிர்மனுதாரர் வீட்டிற்குள் நுழையவிடாமல் விரட்டிவிட்டதாகவும், அதனால் மனுதாரர் மனதளவிலும், உடலளவிலும் மிகவும் பாதிக்கப்பட்டதாகவும், மனுதாரருடன், எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ பலமுறை முயற்சி செய்தும் பலனளிக்கவில்லை என்பதால் விவாகரத்து கோருவதாக கூறியுள்ளார்.

**8.** இந்த வழக்கில் எதிர்மனுதாரர் ஆஜராகியிருந்தும், எதிருரை தாக்கல் செய்து வழக்கினை நடத்தவோ அல்லது மனுதாரரின் மனுச்சங்கதிகளை மறுக்கவோ முன்வரவில்லை என்பதால் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர், மனுதாரரை மனதளவிலும், உடலளவிலும் நோகடிக்கச் செய்து, கடந்த 26.07.2023 முதல் பிரிந்து வாழ்ந்து வருவதாக மனு சங்கதிகள் மற்றும் மனுதாரரின் ம.சா.1 சாட்சியம் மூலம் தெரியவருகிறது. அதனை மறுத்து சாட்சியம் அளிக்க எதிர்மனுதாரர் முன்வரவில்லை. எனவே மனுதாரர் தனது மனுச்சங்கதிகளை நிரூபித்துள்ளதால், அதன் அடிப்படையில் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு வழங்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,**

*(i) இந்த மனு அனுமதிக்கப்படுகிறது;*

*(ii) மனுதாரருக்கும், எதிர்மனுதாரருக்கும் கடந்த 29.05.2017 ஆம் தேதியன்று நடைபெற்ற திருமணத்தை ரத்து செய்து மனுதாரருக்கு விவாகரத்து வழங்கப்படுகிறது;*

*(iii) செலவுத் தொகை இல்லை.*

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட பின்னர், என்னால் சரி பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 02 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**(ஒம்/—எஸ்.முத்துமகாராஜன்)**

சார்பு நீதிபதி,
சாத்தூர்.

<u>**மனுதாரர் தரப்பு சாட்சி :-**</u>

ம.சா.1 – xxxxx (மனுதாரர்)

<u>**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :-**</u>

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | | --- | மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் திருமண அழைப்பிதழ் அசல் |
| ம.சா.ஆ.2 | | --- | மனுதாரரும், எதிர்மனுதாரரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட புகைப்படம் |
| ம.சா.ஆ.3 | | --- | மனுதாரரது ஆதார் அடையாள அட்டை ஒளிநகல் |
| ம.சா.ஆ.4 | 02.12.2025 | | மனுதாரரது இருப்பிடச்சான்றிதழ் ஒளிநகல் |

<u>**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**</u> – இல்லை

**(ஒம்/-எஸ்.முத்துமகாராஜன்)**
சார்பு நீதிபதி,
சாத்தூர்.

/உண்மை நகல்/

MUTHUMAHARAJAN S
Digitally signed by MUTHUMAHARAJAN S
Date: 2026.07.02 16:27:09 +0530

சார்பு நீதிபதி,
சாத்தூர்.

**சார்பு நீதிமன்றம், சாத்தூர்.**
**O.P. (HMOP) No.1/2026**
**உத்தரவு**
**நாள் : 02.07.2026**